# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு மார்ச்–13ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.30மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் நகராட்சியுடன் இனாம்கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்டு நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்து 48 வார்டுகளுடன் 53.26சதுரகி.மீட்டர் பரப்பளவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட பெரு நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருகின்றது. நகராட்சியின் மக்கள் தொகை 2011–ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 2,14,412 ஆகும். கரூர் நகராட்சி பகுதியானது மாவட்ட தலைநகரமாகவும், தொழில் நகரமாகவும் திகழ்ந்து வருகிறது. மேலும் கரூர் நகராட்சியானது மாநிலத்தின் மையப்பகுதியாக உள்ளதால் அனைத்து மாவட்டத்திலிருந்தும் பொதுமக்கள் வந்து செல்லும் நகரமாக உள்ளது. நகரில் 1236 எண்ணிக்கையிலான தெருக்கள் மற்றும் சாலைகள் 328.841கி.மீட்டர் அளவில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரை உள்ள பகுதிகளில் உள்ள 67436 குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அன்றாடம் நகரப்பகுதிக்குள் வந்து செல்லும் வெளியூர் பொதுமக்கள் மற்றும் இதர வணிக பயன்பாடுகள் ஆகியவற்றின் மூலம் தினந்தோறும் சராசரியாக 71மெட்ரிக் டன் சேகரமாகும் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. சேகரிக்கப்படும் குப்பைகளில் 41 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை பிரித்து நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரகிடங்கு மையங்களிலும், 24.50ஏக்கர் பரப்பளவில் உள்ள நகராட்சி சொந்தமான உரக்கிடங்கில் இயந்திரங்களுடன் அமைக்கப்பட்ட திடக்கழிவு செயலாக்க மையம் (Processing Unit) ஆகியவற்றின் மூலம் குப்பைகளை மறுசுழற்சி செய்யப்படுகிறது. மேலும் 20 மெட்ரிக் டன் மக்காத கழிவுகள் அழிப்பதற்கான அமைப்பு இல்லாத காரணத்தினால் அரியலூரில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்படுவதால் நகராட்சியின் மூலம் அதிக செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி கரூர் நகராட்சிக்கு அருகில் உள்ள சின்னடாங்கோவில் கிழக்கு ஊராட்சி மக்கள் தொகை - 19779, காதப்பாறை ஊராட்சி மக்கள் தொகை – 9875 ஆகும். மேற்படி ஊராட்சி பகுதிகளில் தினசரி சேகரமாகும் 5மெட்ரிக் டன் மக்காத குப்பைகளையும், நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் 20 மெட்ரின் டன் மக்காத குப்பைகளையும் ஆக மொத்தம் 25 மெட்ரிக் டன் மக்காத குப்பைகளை நவீன முறையில் அப்புறபடுத்த 25 மெட்ரிக் டன் கொள்ளளவு நவீன எரியூட்டும் இயந்திரம் (Incineration plant) அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.2.00கோடியினை தூய்மை இந்தியா திட்டம் அல்லது அரசு திட்டநிதியில் முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து தரக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி உரிய கருத்துருக்களை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/1143/2020)

தீர்மான எண்.2077 அனுமதிக்கப்பட்டது

2)கரூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சிக்கு மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் மற்றும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்கண்டுள்ள பணிகளுக்கு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ3/2835/2019 நாள்.02.03.2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கரூர் நகராட்சி பெரியகுளத்துப்பாளையத்தில் புதிய | 10.00 |

| | | |
|---|---|---|
| | அங்கன்வாடி மையக் கட்டிடம் அமைத்தல் | |
| 2 | கரூர் மாவட்ட திருவள்ளுவர் விளையாட்டு அரங்கில் நவீன உடற்பயிற்சி கூடம் அமைத்தல் | 40.00 |
| | **மொத்தம்** | **ரூ.50.00 லட்சம்** |

**அலுவலகக் குறிப்பு**
மன்றம் பதிவு செய்யலாம். (இ1/945/2020)

தீர்மான எண்.2078 பதிவு செய்யப்பட்டது.

3)கரூர் நகராட்சி பொறியியல் பிரிவு ஈப்பு எண்.TN 47 AB7476 க்கு 240000க்குண்டான கிலோமீட்டர் சர்வீஸ் பணிகள் செய்ய நடைபெற உள்ள மாண்புமிகு தமிழக முதல்வரின் மருத்துவ கல்லூரியின் மருத்துவமனை திறப்பு விழா வருகையின்போது இவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு 15ன்கீழ் ஆணையர் அவர்களிடம் 28.02.2020 அன்று அனுமதி பெற்று MAHENDRA AND MAHENDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்விஸ் டீலரிடமிருந்து விலைப்புள்ளி பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கும்.

மேற்படி கரூர் நகராட்சி பொறியியல் பிரிவு ஈப்பு எண். TN 47 AB7476 க்கு 240000க்குண்டான கிலோமீட்டர் சர்வீஸ் பணிகள் செய்ய MAHENDRA AND MAHENDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/S SHIVA AUTO MOBILES PVT., LTD., ரூ.17,463/—க்கு மதிப்பீடு பட்டியல் வழங்கியுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி ரூ.17463/—யை குடிநீர் நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1) பொறியியல் பிரிவு ஈப்பு எண்.TN 47 AB7476 க்கு 240000க்குண்டான கிலோமீட்டர் சர்வீஸ் பணிகள் செய்ய MAHENDRA AND MAHENDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/S SHIVA AUTO MOBILES PVT., LTD., வரப்பெற்ற மதிப்பீடு பட்டியல் ரூ.17,463/—யை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும், குடிநீர் நிதியில் பட்டியல் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2)மாண்புமிகு தமிழக முதல்வரின் மருத்துவ கல்லூரியின் மருத்துவமனை திறப்பு விழா வருகையின்போது இவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு 15ன்கீழ் ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)அரசின் உச்சவரம்புக்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/2537/2019)

தீர்மான எண்.2079 பதிவு செய்யப்படது.

4)கரூர் நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை திட்டத்தில் உள்ள பாலாம்மாள்புரம் பிரதான கழிவு நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் Unit II மின்மோட்டாருக்குட்பட்ட 150எச்.பி., Auto Transformer Starter ல் பழுது ஏற்பட்டு இயக்க முடியாதநிலை உள்ளது. எனவே, கழிவு நீரேற்று நிலைய பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக Starter பழுது சரிசெய்து இயக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பழுதுநீக்கம் செய்வதற்கும் புதிதாக Wiring செய்து 315A TPN Switch PIN type Switches புதிதாக மாற்றி பொருத்தி மாற்றம் செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.1.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/2020)

தீர்மான எண்.2080 அனுமதிக்கப்பட்டது

**5)** கரூர் நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை திட்ட நிலையத்தில் உள்ள பாலம்மாள்புரம் பிரதான கழிவு நீரேற்றத்தில் இயங்கி வந்த Unit II 150HP New log sewage submercible motor top bearing பழுதினால் மினி மோட்டார் காயில் எரிந்துவிட்டது. எனவே, கழிவுநீரேற்று நிலைய பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக மின்மோட்டார் புதியதாக வைண்டிங் செய்து இயக்க வேண்டியுள்ளது. மேலும் பழுதான பேரிங்குகள்–3நெ., மற்றும் pumpshet தேய்மானமாகிவிட்டதால் புதிதாக SSO மாற்றுவதற்கும், புதிதாக மாற்றி பொருத்தி இயக்க வேண்டியுள்ளது. எனவே, பழுது பணிகளை செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.4.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/2020)

தீர்மான எண்.2081 அனுமதிக்கப்பட்டது

**6)**கரூர் நகராட்சி பகுதியில் புதியதாக உரக்கிடங்கு மையம் அமைக்கும் பணி மற்றும் மிதவேக வாகனம் 2 எண்ணம் வாங்கும் பணியின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 05.09.2018 ம் தேதி அன்று தினச்செய்தி நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.59744/– ஐ Bright Advertising, Chennai, அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்காணும் செலவினத்தொகை ரூ.59744 /–ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/4966/2019)

தீர்மான எண்.2082 அனுமதிக்கப்பட்டது

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**